# <u>தெய்வீகப் பலியில் உறவாடும் தெய்வமே</u>

தெய்வீகப் பலியில் உறவாடும் தெய்வமே - 2

உன்னோடு பலியாக நானும் இணைகின்றேன்

காணிக்கை ஏற்றிடுவாய் காணிக்கை ஏற்றிடுவாய்

தெய்வீகப் பலியில் உறவாடும் தெய்வமே

வானம் காணும் ஒளி எல்லாம் - என்
தேவன் தந்த காணிக்கை } 2

மேகம் சிந்தும் துளி எல்லாம் - என்
தேவன் தந்த காணிக்கை } 2

இந்த நினைவில் எந்தன் வாழ்வை

காணிக்கை தந்தேன் உன் மலர்ப்பாதம்

தெய்வீகப் பலியில் உறவாடும் தெய்வமே

வேதம் சொன்ன வழியெல்லாம் - என்
தேவன் தந்த காணிக்கை } 2

பாதம் படைத்த கனியெல்லாம் - என்
தேவன் தந்த காணிக்கை } 2

இந்த நினைவில் எந்தன் வாழ்வை

காணிக்கை தந்தேன் உன் மலர்ப்பாதம்